**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 16 September 2025

# மருத்துவர்களின் திறனிழப்பைத் தடுக்க ‘ஏஐ அற்ற’ நேரம்


தொழில்நுட்பத்தை அதிகமாக நம்பியிருப்பதால் ஏற்படும் திறனிழப்பைத் தடுக்கும் முயற்சிகளில் ஒன்றாகத் தேசியப் பல்கலைக்கழக சுகாதாரக் குழுமம் (என்யுஎச்எஸ்) கடந்த ஆண்டில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) அற்ற நேரங்களை மருத்துவர்களுக்கு உருவாக்கியது.

தேசிய சுகாதாரப் பராமரிப்புக் குழுமமும் (என்எச்ஜி ஹெல்த்), இதே போன்ற நடவடிக்கைகளை ஆராய்ந்து வருகிறது.

இந்த ‘ஏஐ அற்ற’ காலங்களில், சுகாதாரப் பணியாளர்கள் மருத்துவ வேலை அல்லது மதிப்பீடுகளைச் செய்யச் செயற்கை நுண்ணறிவு கருவிகளைப் பயன்படுத்துவதில்லை.

மருத்துவர்களைக் கண்காணித்தல், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதன் அபாயங்களைப் பற்றி மருத்துவ மாணவர்களுக்கும் மருத்துவர்களுக்கும் கற்பித்தல் ஆகியவை திறனிழப்பைத் தடுப்பதற்கான பிற சாத்தியமான வழிகள்.

பெருங்குடலில் புற்றுநோய்க்கு முந்தைய வளர்ச்சியைக் கண்டறிய செயற்கை நுண்ணறிவு உதவியைப் பயன்படுத்திய சில மாதங்களிலேயே, அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் ஏஐ உதவியின்றி புற்றுநோய் அறிகுறிகளைத் திறமையாகக் கண்டறிய முடியவில்லை என்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இந்த அச்சுறுத்தலை முன்னிலைப்படுத்தியது.



தொழில்நுட்பத்தை அதிகம் சார்ந்திருப்பதால், ஏற்கெனவே அறிந்திருந்த திறன்களை இழப்பது திறனிழப்பு என்று சொல்லப்படுகிறது. **படம்:** UNSPLASH

‘லான்செட் கேஸ்ட்ரோஎன்ட்ரோலஜி அண்ட் ஹெப்படோலஜி’ என்ற இரைப்பை குடல், கல்லீரல் மருத்துவ சஞ்சிகையின் ஆகஸ்ட் 2025 இதழில் வெளியிடப்பட்ட ஆய்வு, போலந்தில் உள்ள நான்கு எண்டோஸ்கோபி மையங்களில் மருத்துவர்கள் கட்டிகளைக் கண்டுபிடிக்க ஏஐ கருவியைப் பயன்படுத்துகிறார்கள். அத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் மருத்துவர்கள் கட்டியின் வளர்ச்சியைக் கிட்டத்தட்ட 28 விழுக்காடு பரிசோதனைகளில் கண்டறிந்தனர். ஆனால், ஏஐ கருவி பயன்பாட்டுக்குப் பின்னர் அந்த விகிதம் கிட்டத்தட்ட 22 விழுக்காடாகக் குறைந்தது.

சிங்கப்பூர் மக்கள்தொகை விரைவாக அதிகரித்து வருவதால், சுகாதார சேவைகளுக்கான தேவையும் அதிகரித்து வருகிறது. பொதுச் சுகாதாரத் துறையில் விரைவான, துல்லியமான நோய் பரிசோதனைக்கும் ஆரம்ப தலையீட்டுக்கான நோய் குறித்த பகுப்பாய்வுக்கும், வழக்கமான பணிகளைத் தானியங்கி மயமாக்கவும் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுகிறது.

என்யுஎச்எஸ்-இன் ஏஐ அலுவலகத்தின் தலைவரான துணைப் பேராசிரியர் நியம் கீயுவான், செயற்கை நுண்ணறிவைக் கவனமாகவும் பொறுப்புடனும் பயன்படுத்தும் தேவையை ஆய்வு எடுத்துக்காட்டுவதாக ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்சிடம் கூறினார். அதேவேளையில், ஆய்வு சில வரையறைகளுடன் ஒரு குறிப்பிட்ட ஆய்வை மட்டுமே பிரதிபலிப்பதாகவும் அதனால் மருத்துவர்களின் திறன்களை ஏஐ பலவீனப்படுத்துகிறது என்று அர்த்தமல்ல என்றும் அவர் கூறினார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.